تاميل

# فضل صيام يوم عاشوراء
# முஹர்ரம் மாத ஆஷூரா நோன்பு

**சகோதரர்களே!**

உங்கள் முன் சென்ற ஒரு வருடப் பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு இதோ, இறைவன் சிறந்ததோர் வாய்ப்பை வழங்கியுள்ளான். அதுவே ஆஷூரா தின நோன்பாகும்.

عن أبي قتادة رضي اللّٰه عنه قال: سئل النبي صلى اللّٰه عليه وسلم عن صيام يوم عاشورا ، فقال: إني أحتسب على اللّٰه أن يكفر السنة التي قبله (رواه مسلم.)

அபி கதாதா என்ற நபித் தோழர் கூறுகிறார்கள்: நபியவர்களிடம் நான் ஆஷூரா நோன்பைப் பற்றி கேட்ட போது "யார் அத்தினத்தில் நோன்பு வைக்கிறாரோ அவரின் முன் சென்ற ஒரு வருடப் பாவங்கள் மன்னிக்கப்படும்" எனக் கூறினார்கள்.

(ஆதாரம்: முஸ்லிம்

## அத்தினத்தில் நோன்பு வைப்பதற்கான காரணம்:

நபியவர்கள் மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்ற போது அங்கிருந்த யூதர்கள் ஆஷூரா நோன்பு வைத்திருந்தார்கள் அப்போது ஏன் இந்த நாளில் நோன்பு வைக்கிறீர்கள் என்று கேட்கப்பட்ட போது

இந்த நாளில் தான் எம் தூதர் மூஸா நபியவர்களை இறைவன் காப்பாற்றி பிர்அவ்னை நீரில் மூழ்கடித்தான். அதற்கு நன்றியாக நாம் நோன்பு வைக்கிறோம் என்றார்கள். பின்பு நபியவர்கள் அதை விட நாமே அதற்கு மிக தகுதியுடையவர்கள் எனக் கூறி மற்றவர்களையும் நோன்பு வைக்குமாறு ஏவினார்கள்.

மேலும் நபியவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரலி அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் அடுத்த வருடம் உயிருடன் இருந்தால் பிறை 9,ம் நாளும் 10 ம் நாளும் நோன்பு வைப்பேன் என்றார்கள்.

**முஹர்ரம் மாதம் 9, 10 அல்லது 10, 11 தினங்களில் நோன்பு வைப்பது சிறந்ததாகும்.**

நாமும் அதிகமதிகம் நன்மைகளைப் பெற்றுக் கொள்ள, இச்சிறந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வோமாக, மேலும் அல்லாஹ் நம் அனைவரது நல்லமல்களையும் அங்கீகரிப்பானாக.

**தொகுப்பு: மவ்லவி இம்ரான்**
அபூஅப்துல் பாசித்